**டிசம்பர் – 02**

# TNPSC துளிகள்

சவுதி அரேபியாவில் உள்ள ரியாத் மெட்ரோவானது, ஆறு வழித்தடங்கள் மற்றும் 85 நிலையங்களில் 176 கிலோமீட்டர் நீளமுள்ள உலகின் மிகவும் நீளமான முழுவதுமாக ஓட்டுநர் இல்லாத மெட்ரோ வலையமைப்பாக மாறியுள்ளது.

- தெலுங்கானாவைச் சேர்ந்த சரயு வேல்புலா 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் 26வது பெண் கிராண்ட்மாஸ்டர் (WGM) ஆனார்.
- நார்வே திரைப்படமான "சேஃப் ஹவுஸ்" ICFT–UNESCO காந்தி பதக்கத்தைப் பெற்றது.
- நாக்பூர் மாநில அரசானது உலர் காற்றில்லா செரிமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்தியாவின் மிகப்பெரிய நகராட்சி திடக்கழிவுகளிலிருந்து அழுத்தப் பட்ட உயிரி எரிவாயு (MSW-to-CBG) ஆலையை பந்தேவாடியில் அமைத்து வருகிறது.
- அயர்லாந்தின் நிதியமைச்சர் பாஸ்கல் டோனோஹோ, உலக வங்கி குழுவின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை தகவல் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - உலக வங்கி குழுமத்தில் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை அறிவு அதிகாரி (CKO) என்ற குறிப்பிட்ட மற்றும் புதிதாகப் பெயரிடப்பட்ட பதவியை வகிக்கும் முதல் நபர் இவர்தான்.
- உத்தரப் பிரதேசம் பிரதான் மந்திரி சூர்ய கர் முஃப்த் பிஜ்லீ யோஜனாவின் கீழ் குடியிருப்புகளின் மேற்கூரையில் நிறுவப்பட்ட சூரிய மின்சக்தியில் 1-ஜிகாவாட் திறனை (1,003.64 மெகாவாட்) தாண்டியுள்ளது என்பதோடு இது குஜராத் மற்றும் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக இந்த மைல்கல்லை எட்டிய மூன்றாவது மாநிலமாக மாறியது.
- 'ஈகிள் ஃபோர்ஸ்' நடவடிக்கையின் மூலம் தெலுங்கானாவின் கழுகுப் படை, போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (NCB), டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவு மற்றும் நொய்டா காவல்துறை ஆகியவை நாடு தழுவிய நைஜீரிய போதைப்பொருள் கும்பலை முடக்கியது.
- சிறந்தச் சுகாதாரக் கண்டுபிடிப்பு, அணுகல் மற்றும் தரத்திற்கான வலுவான கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதற்காக இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் அமைப்பின் (OPPI) 60வது ஆண்டு உச்சி மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.
  - இந்த உச்சிமாநாட்டின் கருத்துரு, 'Power of Partnerships' என்பதாகும்.
- மாஸ்கோ சுற்றுலாவிற்கான இரண்டாவது பெரிய CIS (காமன்வெல்த் ஆஃப் இன்டிபென்டன்ட் ஸ்டேட்ஸ்) அல்லாத மூலச் சந்தையாக இந்தியா மாறியது.
  - 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஆண்டிற்கு 40% அதிகரிப்புடன் 40,800 இந்தியச் சுற்றுலாப் பயணிகள் மாஸ்கோவிற்கு வருகை தந்தனர்.
- மும்பையில் ஒரே நாளில், மிகப்பெரிய தொழில் துறை ஆலோசனை வழங்கீடு நிகழ்வினை நடத்தி இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) கின்னஸ் உலக சாதனை படைத்தது.
  - 7,400க்கும் அதிகமானப் பங்கேற்பாளர்களுடன் 6,166 மாணவர்கள் இதில் சாதனை அளவாக அதிகாரப் பூர்வமாகப் பங்கேற்ற ஒரு நிலையில் இது மும்பையில் நடைபெற்றது.
- இலங்கையைத் தாக்கிய தித்வா புயலால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக இந்தியா சாகர் பந்து என்ற நடவடிக்கையினை தொடங்கியது என்பதோடு இதில் INS விக்ராந்த் மற்றும் INS உதய்கிரியைப் பயன்படுத்தி நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

- வடக்குக் கடல் பாதை (NSR) வழியாக சீனா ஆர்க்டிக் எக்ஸ்பிரஸ் கப்பல் பாதையைத் தொடங்கியது.
  - இந்தப் பாதையானது தளவாடச் செலவுகள் மற்றும் கார்பன் உமிழ்வினை 50% குறைப்பதோடு, செங்கடல் மற்றும் ஹார்முஸ் போன்ற நெரிசலான இடங்களைத் தவிர்க்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு ஆடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்புக் கொள்கை 2025





- தமிழ்நாடு ஆடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்புக் கொள்கை, சமீபத்தில் மாநில அரசால் வெளியிடப்பட்டது.
- ஆடுகளுக்கான தடையற்ற அனைத்து வகை கரு இனப்பெருக்க முறையையும், செம்மறி ஆடுகளுக்கு உயர்தரமான செம்மறியாடுகளின் இனத்திற்குள் தேர்ந்தெடுக்கப் பட்ட இனப்பெருக்கத்தையும் இது ஆதரித்துள்ளது.
- சிறப்பான உற்பத்திக்காக செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடை மேம்படுத்துதல், உள்ளூர் இனங்களைப் பாதுகாத்தல் மற்றும் ICAR-NBAGR நிறுவனத்தில் பூர்வீக/உள்ளூர் இனங்களின் பதிவை ஆராய்வதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 20வது கால்நடை கணக்கெடுப்பின்படி, செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 45 லட்சமாகவும், ஆடுகளின் எண்ணிக்கை 98 லட்சமாகவும் இருந்தது.
- மேச்சேரி, கீழகரிசல், வேம்பூர், கோயம்புத்தூர், சென்னை சிவப்பு ஆடு, இராமநாத புரம் வெள்ளை செம்மறி ஆடு, கட்சைக்கட்டி செம்மறி ஆடு, நீலகிரி, திருச்சி கருப்பு ஆடு மற்றும் செவ்வாடு ஆகியவை தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட செம்மறி ஆடு இனங்களாகும்.
- கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆடு ஆகியவை இந்த மாநிலத்தில் அங்கீகரிக்கப் பட்ட ஆடு இனங்களாகும்.

## நீலகிரி வரையாடுகளின் தகவல் பரப்பு மையம்


- கோவையில் செம்மொழிப் பூங்காவிற்கு அருகில் காந்திபுரத்தில் ஒரு நீலகிரி வரையாடு தகவல் பரப்பு மையம் நிறுவப்படும்.
- கடந்த ஆண்டு, தமிழ்நாடு மாநிலத்தில் 13 வழித் தடங்கள் மற்றும் 140 இடங்களில் நடத்தப் பட்ட கணக்கெடுப்பின் போது 1,031 நீலகிரி வரையாடுகள் பதிவு செய்யப் பட்டன.

- இந்த ஆண்டு, 14 வாழ்விடங்கள் மற்றும் 175 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், 1,303 நீலகிரி வரையாடுகள் பதிவு செய்யப்பட்டன என்ற நிலையில் இது 272 என்ற அதிகரிப்பைக் காட்டுகிறது.
- ஆனைமலை புல் மலைகளில் தமிழ்நாட்டிலேயே மிகவும் அதிகபட்சமாக 334 நீலகிரி வரையாடுகள் பதிவாகியுள்ளன.
- கேரளாவில் 1,352 நீலகிரி வரையாடுகளும் பதிவாகியுள்ளது என்பதோடு இது தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கான ஒருங்கிணைந்த மொத்த எண்ணிக்கையை 2,655 ஆக உயர்த்தியது.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் தூய்மையான தொழில் துறை திட்டம்




- சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய தூய்மையான தொழில் துறை திட்டங்களை இந்தியா கொண்டுள்ளது.
- நாட்டில் 150 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் மதிப்புள்ள 65 வணிக அளவிலான தூய்மையான தொழில்துறை திட்டங்கள் உள்ளன.

- ஆறு தொழிற்சாலைகள் மட்டுமே இறுதி முதலீட்டு முடிவு (FID) கட்டத்தை எட்டி உள்ளன.
- இந்தத் தொழிற்சாலைகள் ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத், இராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாட்டில் அதிகம் உள்ளன.
- இந்தத் திட்டத்தின் சுமார் 80% ஆனது 50 அம்மோனியா மற்றும் மெத்தனால் ஆலைகள் உட்பட, இரசாயனத் துறையால் பயன்படுத்தப்படுகிறது.
- குறைந்த உமிழ்வுத் தொழில்நுட்பங்களை இயக்கும் எஃகு, சிமெண்ட், விமானப் போக்குவரத்து மற்றும் அலுமினியம் ஆகியவை பிற துறைகளில் அடங்கும்.

## SoLAR திட்டத்தின் இரண்டாம் கட்டம்




- SoLAR திட்டத்தின் இரண்டாம் கட்டம் (வேளாண்மையில் மீள்தன்மைக்கான சூரிய சக்தி சார் நீர்ப்பாசனம்) சுவிட்சர்லாந்து மேம்பாட்டு மற்றும் ஒத்துழைப்பு நிறுவனத்தின் (SDC) ஆதரவுடன் சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனம் (IWMI) தலைமையில் செயல் படுகிறது.
- சிறு விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசன வசதியை விரிவு படுத்துவதும், வேளாண்மையில் பருவநிலை மீள்தன்மை, நீர்ப் பாதுகாப்பு மற்றும் தூய்மையான எரிசக்தி ப்பயன்பாட்டை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டம் இந்தியா, வங்காளதேசம், கென்யா மற்றும் எத்தியோப்பியாவில் சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துகிறது.
- சூரிய நீர்ப்பாசனத்திற்கான கொள்கைகளை உருவாக்க இது முதலாம் கட்டத்தில் இருந்து (2019–2025) பெறப்பட்ட ஆதாரங்களைப் பயன்படுத்துகிறது.
- விவசாயிகள் சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகளை Pay-as-You-go (PAYG), நுண் நிதி மற்றும் கலப்பு நிதி திட்டங்கள் மூலம் அணுகலாம்.
- இந்தத் திட்டம் விவசாயிகள் மற்றும் உள்ளூர் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவவும் பராமரிக்கவும் பயிற்சி அளிக்கிறது.

## திருத்தப்பட்ட நிலநடுக்கப் பாதிப்புக் குறியீடு 2025

- இந்தியத் தரநிலைகள் வாரியத்தால் தயாரிக்கப் பட்ட 2025 ஆம் ஆண்டு நில நடுக்கப் பாதிப்புக் குறியீட்டின் கீழ் புதுப்பிக்கப்பட்ட நில அதிர்வு மண்டல வரைபடத்தை இந்தியா வெளியிட்டது.

- ஜம்மு காஷ்மீர்-லடாக் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரையிலான முழு இமயமலை வளைவும் தற்போது VIவது புதிய அதிக ஆபத்து மண்டலத்தில் வைக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் சுமார் 61% பகுதி தற்போது மிதமான மற்றும் அதிக நிலநடுக்க அபாயம் உள்ள மண்டலங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இரண்டு மண்டலங்களுக்கு இடையில் அமைந்திருந்தால் எல்லை/இடைப்பட்ட நகரங்கள் தானாகவே அதிக ஆபத்து மண்டலத்தில் வைக்கப்படும்.
- இந்த வரைபடமானது புதுப்பிக்கப்பட்ட மண் மற்றும் தரை-பதில் வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய நிகழ்தகவு சார் நில அதிர்வு அபாய மதிப்பீட்டை (PSHA) பயன்படுத்துகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### இந்தியா-அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு வர்த்தகம்




- இந்தியாவானது 92.8 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஜாவெலின் எறிகணைகள் மற்றும் எக்ஸ்காலிபர் எறிபொருள்களை வாங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்தது.
- இது தொடர்புடைய உபகரணங்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளுடன் கூடிய 216

M982A1 எக்ஸ்காலிபர் தந்திரோபாயப் பயன்பாட்டு எறிபொருள்களை இந்தியாவானது கோரியது.

- இந்தியா 100 FGM-148 ஜாவெலின் சுற்றுகள், 1 ஜாவெலின் எறிகணை மற்றும் 25 ஜாவெலின் கட்டளையுடன் கூடிய ஏவு அலகுகளையும் அது கோரியது.
- எக்ஸ்காலிபர் ஒப்பந்தம் 47.1 மில்லியன் டாலருக்கும், ஜாவெலின் எறிகணை ஒப்பந்தம் 45.7 மில்லியன் டாலருக்கும் என விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## WTDC 2025 மாநாடு





- 2025 ஆம் ஆண்டு உலகத் தொலைத்தொடர்பு மேம்பாட்டு மாநாடு (WTDC) ஆனது அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Universal, meaningful, and affordable connectivity for an inclusive and sustainable digital future" என்பதாகும்.
- இந்த மாநாடு உலகில் இன்னும் இணைய அணுகல் இல்லாத 2.6 பில்லியன் மக்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2026 முதல் 2029 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளுக்கான டிஜிட்டல் மேம்பாட்டிற்கான உலகளாவியச் செயல் திட்டத்தினை உருவாக்கியது.
- அஜர்பைஜானின் டிஜிட்டல் மேம்பாடு மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சகம் நடத்துகின்ற இந்த நிகழ்வை சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஏற்பாடு செய்கிறது.

## சர்வதேசக் கடற்படை ஆய்வு 2025

- கொழும்புவில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு சர்வதேசக் கடற்படை மதிப்பாய்விற்கு இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் விமானம் தாங்கி கப்பலான INS விக்ராந்தை அனுப்பியது.
- இந்தியா உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வழிகாட்டப்பட்ட எறிகணை போர்க் கப்பலான INS உதயகிரியையும் இதற்கு அனுப்பியது.
- இது INS விக்ராந்த் மற்றும் INS உதயகிரி ஆகிய இரண்டிற்குமான முதல் வெளிநாட்டுச்

செயல்பாடு ஆகும்.

- ❖ இந்தக் கப்பல்கள் கடற்படை மறு ஆய்வு நடவடிக்கைகள், அணி வகுப்புகள் மற்றும் பொது மக்கள் அணுகல் நிகழ்வுகளில் பங்கேற்றன.
- ❖ இலங்கைக் கடற்படையின் 75வது ஆண்டு நிறைவின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு நடைபெற்றது.




## பெண் கொலைச் சட்டம் – இத்தாலி




- ❖ பாலினத்தின் காரணமாக பெண்களைக் கொல்வதை கருத்தில் கொண்டு அதிகாரப்

பூர்வமாக பெண் கொலை என்ற ஒரு புதிய சட்டத்தை இத்தாலி நிறைவேற்றியுள்ளது.

- இந்தச் சட்டம் பெண் கொலையை ஒரு தனிக் குற்றமாக ஆக்குவதோடு, குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களுக்கு ஆயுள் தண்டனையை வழங்க அனுமதிக்கிறது.
- பெண் கொலையில் பாலினத்தினையே முதன்மை காரணமாக கொண்டு இணையர்கள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது பிறரால் செய்யப்படும் கொலைகள் அடங்கும்.
- பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் அதன் எச்சரிக்கை அறிகுறிகள் குறித்த பொதுமக்களின் புரிதலை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## IMO சபைக்கு இந்தியா தேர்வு




- 2026–27 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) சபைக்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இலண்டனில் நடைபெற்ற IMO சட்டமன்றத்தின் 34வது அமர்வின் போது இந்தத் தேர்தல் நடைபெற்றது.
- சர்வதேசக் கடல்சார் வர்த்தகத்தில் அதிக ஆர்வம் கொண்ட பத்து நாடுகளின் பிரிவில் இந்தியாவானது அதிகபட்சமாக 169 செல்லுபடியாகும் வாக்குகளில் 154 வாக்குகளைப் பெற்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் தேசியப் பவளப்பாறை ஆராய்ச்சி மையம்


- தெற்கு அந்தமானின் சிடியாதபு என்ற இடத்தில் இந்தியாவானது தேசியப் பவளப் பாறை ஆராய்ச்சி நிறுவனத்தை (NCRRI) நிறுவ உள்ளது.
- சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் கீழ் இதற்கான திட்டச் செலவினம் 120 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- NCRRI பவளப்பாறை ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக்கான தேசிய மையமாகச் செயல்படும்.
- இந்த மையம் கடல் சார் பல்லுயிர் மதிப்பீடுகள், பவளப்பாறை மீளுருவாக்கம் மற்றும் பருவநிலைத் தாக்க ஆய்வுகளில் கவனம் செலுத்தும்.

- பவளப்பாறைகள் புயல் தாக்கத்தைக் குறைத்து, இயற்கை கடலோரத் தடுப்புகளாகச் செயல்படுகின்றன என்ற நிலையில் மேலும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் இந்தியாவின் நான்கு பல்லுயிர்ப் பெருக்க மையங்களில் ஒன்றாகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## UNICEF SoWC 2025 அறிக்கை




- "Ending Child Poverty – Our Shared Imperative" என்ற SoWC (உலகில் உள்ள குழந்தைகளின் நிலை) 2025 அறிக்கையை UNICEF வெளியிட்டது.
- இந்த அறிக்கை 130க்கும் மேற்பட்ட குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் தரவுகளைப் பயன்படுத்தியது.
- உலகில் சுமார் 19 சதவீதத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் கடுமையான நிதியியல் வறுமையில் வாழ்கின்றனர்.
- இந்த நாடுகளில் வாழும் 5 குழந்தைகளில் 1க்கும் மேற்பட்டோர் குறைந்தது இரண்டு அடிப்படைத் தேவைகளில் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.
- இந்தியாவில், சுமார் 206 மில்லியன் குழந்தைகள் ஒரு பற்றாக்குறையை எதிர் கொள்கின்றனர் என்ற நிலையில் மேலும் சுமார் 62 மில்லியன் குழந்தைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.

❖ குழந்தைகளிடையே மிகவும் பொதுவாக நிலவும் கடுமையான பற்றாக்குறையானது சுகாதாரம் என்று இந்த அறிக்கையில் கண்டறியப்பட்டது.

## வருடாந்திர நிலத்தடி நீர் தரம் குறித்த அறிக்கை 2025


❖ மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) ஆனது 2025 ஆம் ஆண்டு வருடாந்திர நிலத்தடி நீர் தரம் குறித்த அறிக்கையை வெளியிட்டது.

❖ இந்தியாவின் நிலத்தடி நீரில் சுமார் 71.7% ஆனது இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் (BIS) வரம்புகளைப் பூர்த்தி செய்கிறது, அதே நேரத்தில் 28.3% மாதிரிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அளவுருக்களுக்கான வரம்புகளை மீறுகின்றன.

❖ சுமார் 20% மாதிரிகளில் கண்டறியப்பட்டதுடன் நைட்ரேட் மாசு மிகவும் பரவலான மாசுபாடு ஆக உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஃப்ளோரைடு மற்றும் உப்புத் தன்மை மாசு காணப்படுகிறது.

❖ பெரும்பாலும் பஞ்சாப், ஹரியானா மற்றும் டெல்லியில் பருவமழைக்கு முந்தையதாக பெறப் பட்ட 6.71% மாதிரிகளிலும், பருவமழைக்குப் பிந்தையதாக பெறப்பட்ட 7.91% மாதிரிகளிலும் யுரேனியமானது மாசுபாடு பாதுகாப்பான வரம்புகளுக்கு மேல் (30 ppb) உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

❖ சுமார் 94.3% மாதிரிகள் "சிறந்த வகை"யில் உள்ளதுடன், நிலத்தடி நீர் பெரும்பாலும் பாசனத்திற்கு ஏற்றதாக உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## கர்நாடகாவின் குவாண்டம் தொழில்நுட்ப நகரத்திற்கான வரைபடம்

❖ 28வது பெங்களூரு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் (2025) இந்தியாவின் முதல் குவாண்டம் தொழில்நுட்ப நகரத்திற்கான (Q-City) வரைபடத்தினை கர்நாடக மாநிலம் வெளியிட்டது.

- சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான குவாண்டம் திட்டத்தின் கீழ் கர்நாடகாவின் ஹெசரகட்டாவில் இந்தக் குவாண்டம் தொழில்நுட்ப நகரம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் குவாண்டம் ஆராய்ச்சி, புதுமை மற்றும் வணிகமயமாக்கலை ஊக்குவிப்பதை குவாண்டம் தொழில்நுட்ப நகரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் ஆராய்ச்சி ஆய்வகங்கள், குவாண்டம் வன்பொருள் பூங்கா, கிரையோஜெனிக் சோதனை அலகுகள் மற்றும் குவாண்டம் மேகக் கணினி/தரவு மையங்கள் ஆகியவை அடங்கும்.
- குவாண்டம் சில்லுகளின் உற்பத்திக்காக பெங்களூருவில் 1,136 கோடி ரூபாய் மதிப்பிலான குவாண்டம் மேம்பாட்டு மையத்தையும் கர்நாடகா அமைக்க உள்ளது.





## இந்தியாவின் முதல் ‘1 Bio’ மையம்

- தெலுங்கானா மாநிலமானது, ஐதராபாத்தில் உள்ள ஜீனோம் பள்ளத்தாக்கில் 1 Bio எனப்படுகின்ற இந்தியாவின் முதல் ஒற்றை-பயன்பாட்டு உயிரிச் செயல்முறை வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு மையத்தினைத் தொடங்கியது.
- 1 Bio என்பது, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் நிறுவப்பட்ட உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு முழுமையான செயல்முறை மேம்பாடு மற்றும் சோதனை அளவிலான சரி பார்ப்பை வழங்குகிறது.
- இந்த மையத்தில் 500 லிட்டர் வரை கொள்ளளவு கொண்ட உயிரி உலை, மேம்பட்ட மேல்நிலை மற்றும் கீழ்நிலை அமைப்புகள், பகுப்பாய்வு ஆய்வகங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளன.
- தெர்மோ ஃபிஷர் சயின்டிஃபிக் நிறுவனத்துடன் இணைந்து, சுமார் 90 கோடி ரூபாய் முதலீட்டில் ஓர் உயிரி செயல்முறை வடிவமைப்பு மையம் உருவாக்கப்பட்டது.
- இந்தத் துவக்கம் ஆனது ஜீனோம் பள்ளத்தாக்கின் 25ம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது

என்பதோடு 2030 ஆம் ஆண்டிற்குள் உயிரின அறிவியலில் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்கும் தெலுங்கானாவின் இலக்கையும் ஆதரிக்கிறது.




## தேயிலை தொழிலாளர்களுக்கான நில உரிமை




- 2025 ஆம் ஆண்டு அசாம் நில உடைமை உச்ச வரம்பு (திருத்தம்) சட்டத்தினை அசாம் அரசு நிறைவேற்றியுள்ளது.
- தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பகுதியில் வாழும் குடும்பங்களுக்குக் குடியிருப்பு நிலத்தின் சட்டப்பூர்வ உரிமையை இந்த சட்டம் வழங்குகிறது.
- இது இந்த நிலங்களை தேயிலை சாகுபடியில் துணை நில வகையிலிருந்து நீக்குகிறது.

- ஒதுக்கப்பட வேண்டிய நில அளவுகளை அரசாங்கம் அறிவித்து, ஒரு பிகாவிற்கு 3,000 ரூபாய் வீதம் சுமார் 65.57 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கும்.
- அசாமில் 2 லட்சத்திற்கும் அதிகமான பிகா நிலங்களை உள்ளடக்கிய தொழிலாளர் காலனிகளைக் கொண்டுள்ளசுமார் 825 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன.
- இந்தத் திருத்தம் தேயிலைத் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நீண்ட கால ஏற்றத் தாழ்வுகளை சரி செய்து அவர்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★